1026

ஓம்.

ஸ்ரீராமச்சந்திர பரப்பிரம்மணே நம:

முசிரி தாலூகா எறகுடியில்
எழுந்தருளியிருக்கும்

# ஸ்ரீ புளியடிக்
# கருப்பண்ணசுவாமி பதிகம்.

22 AUG 1927

இஃது
குளித்தலையிலிருக்கும் ரிட்டயர்ட்
எட் [illegible]க்கவுண்டெண்டு
தி. அப்பாவு ஆச்சாரியார் அவர்களால்
இயற்றப்பெற்று

கருவூர் "விவேகபானு அச்சுக்கூடத்தில்"
பதிப்பிக்கப்பெற்றது.

1927.

[அணா 1.

Q2998:38.2192 PIL
N27.
179985

ஓம்.

ஸ்ரீராமச்சந்திர பரப்பிரம்மணேநம:

AUG 1927
MADRAS

எறகுடி

# ஸ்ரீ புளியடிக்
# கருப்பண்ணசுவாமி பதிகம்.

---

## காப்பு.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

சீர்மேவும் எறகுடியிற் புளியடிவாழ் கருப்பண்ண
தேவைப் போற்றி
தார்மேவு மன்னவன்றன் சீர்த்தியெனும் பதிகத்தை,
தமிழ்ப் பாவாகப்
பார்மேவப் பகருதற்குப் பண்பில்லா என்னுளத்திற்
பதிந்து காக்கும்
ஏர்மேவுங் கொம்பொருநால் வாயைந்து கரத்தானை
இறைஞ்சி வாழ்வாம்.

179925



## ஆசிரிய விருத்தம்.

எண்ணரிய பிறவியில் மானிடஜென்ன மெடுத்துயான்
பட்டதுயர் மெத்தவுண்டு
உன்னையே நம்பினேன் செல்லாயிமகனே எனைகார்ப்ப
துன்கடனே ஐயா
மாசி பெரியண்ணநீயே மறைவான வடிவெடுத்து
வந்தமர்ந்தாய் செல்லிவாசல்
வேறு திக்கில்லை உனையே வந்தடைந்தேன்
உறுதிவைத் தாளுமையா
ஆருக்கு மடங்காத அமலனே உனைவேண்டினேன்
அன்புவைத் தென்னையாள்வாய்
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ணதுரையே. (1)

உலகெலாம் புகழ்பெற்ற ரெத்னமய பாகையும்
ஓங்குபுகழும் கவசமும்
ஒப்பிலா கலிக்கிதுராயும் கைதனில் செப்பரிய
வெட்டறுவாளும் வேலும்
இடுப்பினில் ஒட்டியாணமும் கிண்கிணி மாலையும்
விலைபெற்ற கின்காப்புசல்லடமும்

காலினில் வெண்டயம் பாதக்குரடும் பவனிவர
அசுவ வாகனமும்
எதிர்த்தவரை மார்பை பிளக்கும் வேலாயுதமும்
விண்ணவர்கள் புகழ்செய்யவும்
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ண துரையே. (2)

என்னை விட உலகினில் பாவியுமுண்டோ என்செய்வேன்
கஷ்ட மிகவடைந்தேன்
ஏழைமேல் கிருபைவைத்து ஈடேற்றவேண்டுமே
எனக்கு யாரும் துணையில்லையே
எங்கும் திரிந்துயான் உன்பாதம் வந்தடைந்தேன்
இதைஉறுதியாய் கொள்ளுமையா
என் தங்கமே செல்வமே வேறு உதவியில்லையே
என் கஷ்டத்தை தீர்த்தருளுவாய்
வேங்கைமேலேறியே விரைவாக வந்தெனது
விசனத்தை மாற்றுமையா
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ண துரையே. (3)

அண்ணலே அப்பனே கருப்பண்ணசுவாமியே உன்னை
அடிவணங்கி தெண்டனிட்டேன்
அபயமென் றுனையடைந்தேனென் கஷ்டத்தைதீர்த்துமே
கருணையுடன் காருமையா
என்செய்வேன் ஒருவழியும் காணாமல் உள்ளுடைந்து
மிக வருந்தினேன்
அசுவமதி லேறியே ஆவலாய் வந்துன்
அன்பனை ஆட்கொள்ளுமையா
வேகமாய் வாராமல் ஜாலமதுசெய்தால் உனக்
கபகீர்த்தி வந்துநேரும்
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ணதுரையே. (4)

வேறொருவர் பிள்ளையான் ஆனாலும் நீபெற்ற
பிள்ளைபோல் பிரியமாய்பார்க்கொணாதோ
எவளவோ குற்றங்கள் செய்திருந்தாலுமதைமன்னித்து
வேண்டும்வரம் அளிக்கொணாதோ
புகலிடம் வேறில்லை உன்னையே நம்பினேன்
என்னையாதரிப்ப துன்பாரம்காண்

எருமைக்கிடா பலிகொள்ளும் எந்தையே நான்
என்செய்வேன் உன்பாதம்வந்தடைந்தேன்
உனைவிட்டுநான் வேறு யாரிடமும் போகேன்
இதுசத்தியமென்றுட்கொள்ளுவாய்
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ணதுரையே. (5)

எங்கெங்கு போனாலும் உன்னைப்போல் தெய்வம்
உலகத்தில் காண்பதரிது
மாசிபெரியண்ணனும் நீயும் ஒன்றேயல்லால்
வேறு வித்தியாசமில்லையே
இருவரும் சேர்ந்துமே வந்தென்னை காப்பாற்றி
இடர்களை தீர்த்தருளுவாய்
அதிகமாய் புகழவும் எடுத்துமிககூறவும் எளியேனால்
ஆகாது ஆகாதையா
என்னமோ சொன்னேனென்றிகழ்ச்சியாய் எண்ணினால்
எளியேனால் சகிக்கொணாது
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ணதுரையே. (6)

என்னைப்போல் பிள்ளைகள் அனேகர் உனக்கிருந்தாலும்
அவர்களில் என்னை ஒருவனாக
சீக்கிரம் வந்தென்னை கைதூக்கி விடவேண்டும்
கர்த்தனே உன்னை மிகவேண்டினேன்
நான் என்செய்வேன் எங்குசெல்வேன் என்தலை
விதிக்கென் செய்குவேன்
என் ஊழ்வினைபைமாற்ற உன்னாலாகுமென் றுனையடை
ந்தேன் ஓடிவந் தருள்புரிகுவாய்
அய்யனே மெய்யனே வேணுநாதப் பிரியனே
உன்னை வெகுவாகநம்பினேன்யான்
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ணதுரையே. (7)

காமாக்ஷிபெற்ற கண்மணியே குகைநாதா உன்
கருவேங்கை சீனிவைத்து
மாசி குன்னை விட்டுவந்து காக்ஷிதருவதற்கு
வெட்டறுவாள் வேலும்கொண்டு
அதிதுரையில்வாருமையா அழகானமேனியனே உன்னை
ஆசையுடன் எதிர்பார்க்கிறேன்

கட்டழகா நீகொஞ்சம் கருணை வைத்தால் போதுமே
கண்ணனே உன்னை சரணம்செய்தேன்
வேறுதிக் கில்லாமல் விருதாவில் உழலுகிறேன்
சித்தம்வைத் தென்னையாள் வாய்
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ண துரையே. (8)

பக்ஷமாய் வந்துனது பாலனைக்காருமே பக்த
பராதீன துரையே
எனக்குள்ள கஷ்டத்தை உன்னிடம் சொல்லாமல்
யாரிடம் சொல்வேனையா
என் துயர் தீர்க்காமல் உபேக்ஷையது செய்தால்
உனக்கழகல்ல சொன்னேனையா
உன்பெருமைக்கும் கீர்த்திக்கும் குறைவு நேரிடாதபடி
அதிவிரைவில் வாருமையா
நீவாராமல் காலதாமிதம் செய்தால் உனக்கு
பழிவந்து சேருமையா
அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ண துரையே. (9)

179985
சென்னை-600 008.



ஊரிலுள்ளகுடிகள் கக்ஷியதுசெய்துமே உன்திருவிழா
வை துவாதசவருஷம் நிறுத்திவிட்டதின்மேல்

தமியேன் ஏற்பட்டு கக்ஷியைதிருத்தி இரண்டுவருஷம்
திருவிழா நடத்தவில்லையா

சிலாவினுல் குதிரையது செய்துமே சன்னதியில்
கொண்டுவந்து வைக்கவில்லையா

உன்மனது இளகாமல் கல்போலிருக்க காரணம்
என்னமோ தெரிகிலேனே

உனக்குஇது தர்மமல்ல ரொம்பவும் வேண்டினேன்
கிருபைவைத் தாளுமையா

அழகான எறகுடியில் புகழாகவாழ்ந்திடும் அய்யனே
புளியடிக் கருப்பண்ணதுரையே. (10)

முற்றிற்று.